# இயேசுவின் பாதங்களைக் கழுவிய ஒரு பெண்

சிறுவர்கள் ஆராதிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

குழந்தைகளின் தேவைக்கும் வயதுக்கும் ஏற்ற நடிவடிக்கைகளைத் தெரிந்து கொள்க.



**முடியுமானால், குழந்தைகள் இந்தப் பாடத்தைப் பார்த்து வரையட்டும் அல்லது வண்ணம் தீட்டட்டும்.**

தனது கண்ணீரால் இயேசுவின் பாதங்களைக் கழுவிய பெண்ணின் கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கவும் அல்லது கூறவும் (லூக். 7:36-50). நாமும் நம்மிடம் உள்ள மிகச் சிறந்ததை இயேசுவுக்கு அளித்து நமது உள்ளத்தில் இருந்து அவரை ஆராதிக்க வேண்டும் என்பதை அவள் காட்டினாள்.

பின்வரும் கேள்விகளை **கேட்கவும்.** பதில்கள் கேள்விகளுக்குப் பின் வருகின்றன.

- எப்படிப்பட்ட பெண் இயேசுவைக் காண வந்தாள்? *(37).*
- இயேசுவிடம் தனக்கிருந்த அன்பை அப் பெண் எவ்வாறு காட்டினாள்? *(38).*
- இயேசு அந்தப் பெண்ணிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பரிசேயர்கள் விரும்பினர்? *(கண்டித்து வெளியே அனுப்பிவிட, 39).*
- அந்தப் பெண்ணா அல்லது பரிசேயர்களா, யார் இயேசுவை அதிகமாக நேசித்தது? *(40-43).*
- இயேசு அந்தப் பெண்ணுக்கு என்ன செய்தார்? *(48).*

**லூக்கா 7** ஆம் அதிகாரத்தில் உள்ள ஆராதிக்கும் பெண்ணைப் பற்றிய கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.** சபைத்தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க. பிள்ளைகள் நாடகத்தை ஆயத்தம் செய்ய அவர்களோடு நேரத்தைச் செலவிடவும். எல்லா பகுதிகளையும் நடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எல்லா வேடங்களையும் ஏற்கும் அளவிற்குப் போதுமான பிள்ளைகள் இல்லை என்றால், அந்தப் பாத்திரங்கள் பேச வேண்டியவற்றை கதை கூறுபவர் சும்மா வாசித்து விடலாம்.

- **பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள்:** இயேசு, கதை கூறுபவர்.
- **சிறிய பிள்ளைகள்:** சீமோன், பரிசேயர்கள், பெண் (பரிமள தைலத்தை குறிக்க ஒரு குப்பியை வைக்கலாம்/அல்லது பாவிக்கலாம்).

**கதை கூறுபவர்:** லூக். 7:36-39 ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறுக. பின்: “சீமோன் பேசுவதைக் கேளுங்கள்!”

**சீமோன்** : “இயேசுவே! நீர் எங்களோடு விருந்து சாப்பிட வந்ததற்காக மகிழ்ச்சி. வாருங்கள் உட்காருங்கள்.” (இயேசு, சீமோன், பரிசேயர்கள் அமர்தல்).

**பரிசேயர்கள்:** “பார்த்தீர்களா? இயேசு முக்கியமானவராகத் தெரியவில்லை” “சீமோன் முத்தமிட்டு இயேசுவை வரவேற்கவில்லை.”

“அவர் இயேசுவின் பாதங்களைக் கழுவவில்லை!”

“அவர் பரிமள தைலத்தை இயேசுவின் மேல் தெளிக்கவில்லை!”

**பெண்** : இயேசுவின் அருகே சென்று முழங்கால்படி இடுகிறாள். அழுகிறாள். அவரது பாதங்களில் பரிமள தைலம் இடுவது போல் பாவித்து தனது தலைமுடியால் துடைக்கிறாள்.

**பரிசேயர்கள்:** “ஆகா! என்ன அருமையான வாசம்” “அது மிகவும் விலை உயர்ந்த பரிமள தைலம்!” “எல்லாம் வீணாகிவிட்டது!”

**சீமோன்** : “இயேசுவே! நான் சொல்லுவதைக் கேளும்! அவள் மிகவும் மோசமாக வாழ்ந்தவள். அவள் உம்மைத் தொட நீர் அனுமதிக்கக் கூடாது. அவளை வெளியே அனுப்பிவிடும்!”

**கதை கூறுபவர்** லூக்கா 7:40-47 ல் இருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின் சொல்லவும்: “இயேசு என்ன கூறுகிறார் என்று கேளுங்கள்.”

**இயேசு** : “சீமோனே! இரண்டு பேர் கடன் வாங்கி இருந்தனர். ஒருவன் மிகக் குறைவாகவும், இன்னொருவன் மிக அதிகமாகவும் கடன் பட்டிருந்தனர். கடன் கொடுத்தவன் இரண்டு பேர் கடனையும் மன்னித்து விட்டான். இந்த இருவரில் மன்னித்தவனை யார் அதிகமாக நேசிப்பான்?”

**சீமோன்** : “அதிகமாக கடன் பட்டிருந்தவனே!”

**இயேசு** : “சரியாகச் சொன்னாய். நான் உன் வீட்டிற்கு வந்தேன். ஆனால் நீயோ என்னிடத்தில் அதிகமாக அன்பு கூரவில்லை. ஆனால் இந்தப் பெண்ணே என்னிடத்தில் அதிகமாக அன்பு கூர்ந்தாள்!”

**கதை கூறுபவர்:** லூக். 7:48-50 ல் இருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும். பின், “இயேசு என்ன கூறுகிறார் என்று கேளுங்கள்!”

**இயேசு** : “பெண்ணே, நான் உன் பாவங்களை மன்னிக்கிறேன்!”

**பரிசேயர்கள்:** (கோபமாக) “இந்த மனிதன் பாவங்களை எப்படி மன்னிக்க முடியும்?”

**இயேசு** : “பெண்ணே! உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடு போ!”



**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகத்துக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூறவும்.

**பிள்ளைகள்** இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே உள்ள கேள்விகளையும் கேட்கவும்.

பரிமளதைல குப்பியின் படத்தை பிள்ளைகள் **வரையட்டும்**. பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவவும். படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, நம்மிடம் இருக்கும் சிறந்ததைக் கொண்டு தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது என்று விளக்கவும். நமது உள்ளத்தில் இருந்து அவரை ஆராதிக்க வேண்டும்.

பிள்ளைகளிடம் கேட்க வேண்டியது: இயேசுவிடம் நமக்குள்ள அன்பை அவருக்கு எவ்விதங்களில் எல்லாம் காட்டுவது? (பிள்ளைகள் பதில் கூறட்டும்).

**மனப்பாடம் :** ரோமர் 12:1.

**சங்கீதம்** 150:1-6 ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

இயேசுவிடம் தங்களுக்குள்ள அன்பைக் குறித்துப் பெரிய பிள்ளைகள் சிறிய கவிதை அல்லது பாடல் எழுதட்டும். வார நாட்களில் அவர்கள் இதைச் செய்யலாம்.

தேவனுக்கு புகழைப் பாடுங்கள்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, எங்கள் உள்ளத்தில் உம்மைப்பற்றிய பெரிய அன்பைக் கொடுத்துள்ளீர். உம்மிடம் உள்ள அன்பை நாங்கள் பல வழிகளில் காட்ட விரும்புகிறோம். நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம். உமக்கு சேவை செய்ய விரும்புகிறோம். எங்களை மன்னித்து எங்களை உமது பிள்ளைகள் ஆக்கியதற்காக நன்றி!"

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net